1971 ஜூன் 28]

DR. H. V. HANDE : Sir, I press for a division.

(மணியடிக்கப்பட்டு, உறுப்பினர்கள் இருக்கைகளில் அமர்ந்த பின்னர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்க வேண்டும்.

(ஆதரிப்போர் எழுந்து நின்றனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்க வேண்டும்.

(எதிர்ப்போர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடுநிலைமை வகிப்பவர்கள் எழுந்து நிற்க வேண்டும்.

(நடுநிலைமை வகிக்கும் உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்).

இந்தத் தீர்மானத்தை ஆதரிப்போர் 110, தீர்மானத்தை எதிர்ப்போர் 16, நடுநிலைமை வகிப்பவர்கள் 4, ஆகவே, ஆதரிப்போர் அதிகமாக இருப்பதால் தீர்மானம் நிறைவேறியது என அறிவிக்கின்றேன்.

பின்னர், சட்ட முன்வடிவு பிரிவுவாரியான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 to 4 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1971) சட்டமாக ஆக்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

5. அறிவிப்பு

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப் படுதலிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.